LIBRARY
23 AUG 2013
EASTERN UNIVERSITY, SRI LANKA

கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
கலை கலாசார பீடம்
நான்காம் வருட முதலாம் அரையாண்டு சிறப்பு
கலை மாணித்தேர்வு 2010/2011 (ஜனவரி/பெப்ரவரி 2013)

**SOCS – 4104 Sociology of Mass media and Mass Communication**
நேரம் : 03 மணித்தியாலங்கள்

பகுதி 1ல் யாதேனும் மூன்று வினாக்களுக்கும், பகுதி 11ல் யாதேனும் ஒரு வினாவுக்குமாக மொத்தம் நான்கு வினாக்களுக்கு விடை தருக.

---

பகுதி – 1

01.அ. மனிதகுல வரலாற்றில் தொடர்பாடற் செயன்முறை (Process of Communication) விருத்திபெற்ற படிநிலைகளை உதாரணங்களோடு குறிப்பிடுக.

(10 புள்ளிகள்)

ஆ. நேர்நிலையான ஆளிடைத் தொடர்பாடலுக்கும் (Inter-Personal Communicatin) வெகுசனத் தொடர்பாடலுக்கும் இடையிலான வேறுபாடுகளைத் தெளிவுபடுத்துக.

(15 புள்ளிகள்)

02.அ. வெகுசனப் பண்பாட்டிலே மக்கள் திரள் ஊடகங்கள் (Mass Media) வகிக்கும் செல்வாக்கினை எடுத்துக்காட்டுக.

(10 புள்ளிகள்)

ஆ. உலகளாவிய நிலையிலும், இலங்கைச் சூழலிலும் வெகுசனப் பத்திரிகைகள் மூலமாக ஏற்பட்ட சமூக அசைவியக்கங்கள் யாவை எனக் குறிப்பிடுக.

(15 புள்ளிக்ள்)

03.அ. தொலைக்காட்சி விளம்பரங்களில் பிரதிபலிக்கப்படும் பால்நிலை சார்ந்த கருத்தியல்கள் யதார்த்த வாழ்வியலுக்குப் பொருந்துவதாக உள்ளதா என்பதனை உதாரணங்களுடன் எடுத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

ஆ. அச்சு முறை வழியான புத்தக உருவாக்கமும், வாசிப்புப் பழக்கமும் சமூகப் பண்பாட்டில் ஏற்படுத்திய மாற்றங்களைக் குறிப்பிடுக. (15 புள்ளிகள்)

04.அ. தற்போதைய ஊடக நுகர்வுப் போக்கிலே வானொலி ஒலிபரப்பின் வகிபாகத்தைச் சமூகவியல் ரீதில் தெளிவுபடுத்துக.

(10 புள்ளிகள்)

ஆ. சமகாலத்தில் இலங்கைச் சூழலில் முனைப்பாகப் பேசப்பட்ட சமூகப்பிரச்சினை ஒன்றைத் தெரிவுசெய்து, அதுபற்றிய வெகுசன ஊடகங்களின் நிலைப்பாட்டினைப் பகுப்பாய்வு அடிப்படையில் விளக்கிக் காட்டுக.

(15 புள்ளிகள்)

## பகுதி – 11

01. "வெகுசன ஊடகங்கள் வெறும் தகவல் பரப்புதலுடன் மாத்திரம் அமையாது, பண்பாட்டு எழுச்சி புதிய சிந்தனைக் கோலங்களுக்கும் வித்திடுவதோடு, சமூக இடைவினையிலும் (Social Interaction) கணிசமான தாக்கத்தைச் செலுத்துகின்றன." இக் கூற்றினை உமது சுயமான விமர்சனப் பார்வையின் கீழ் பரிசீலிக்குக.

(25 புள்ளிகள்)

02. தமிழ் தொலைக்காட்சித் தொடர்கள் பலராலும், பலவாறு விமர்சிக்கப்படுகிறது. சமூகவியல் ரீதியில் குடும்ப உறவிலும் மனோபாவத்திலும் இவை ஏற்படுத்தும் தாக்கங்களைச் சமூக விஞ்ஞான அடிப்படையில் விமர்சனப்பாங்கில் எடுத்துரைக்குக.

(25 புள்ளிகள்)